Koviloor Digital Library

ஸ்ரீ

திருஞானமுத்திரைக் கோவை: 17.

# ஸ்ரீ பராங்குச நாடகம்

என்னும்

# ஆழ்வார் நாடகம்.




பரிசோதித்தவர்:

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித் துறைத்தலைவர்

ராவ்சாகிப்: S. வையாபுரிப்பிள்ளை அவர்கள்.






பதிப்பாசிரியர்:

பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸையங்கார்

திருஞானமுத்திரைப் பிரசுராலயம்

ஆழ்வார்திருநகரி.

காபி ரைட்] 1945 [விலை அணா 12.

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ

# ஸ்ரீ பராங்குச நாடகம்

என்னும்

# ஆழ்வார் நாடகம்

## காப்பு

1. பருதிநிக ருதையமெனப் பார்புகழுந்
திருப்புளிக்கீழ்ப் பரிவாய்க் காரி
தருபராங் குசன்சரிதை தண்டமிழா
லனுதினமும் பாடி யாடத்
திருவளருங் குருகைமால் சேவடியை
நினைந்து தொழுஞ் சேனைநாதர்
வருநாத முனிகருடன் மதுரகவி
மலரடிகள் காப்பதாமே.

2. கருமுகி லாதிநாதர் கழலிணை தன்னைப் போற்றிப்
பரிவுடன் குருகை வாழும் பராங்குச நாடகத்தை
உரைசெயத் தமிழினலிவ் வுலகினிற் பாடி யாடப்
பரகெதி பெற்ற ஆழ்வார் பதின்மருங் காப்பதாமே.

## அவையடக்கம்

3. காசினி புகழரங்கக் கந்தாடை யண்ணனுக்கே
தாசனென் றுரைக்குஞ்சேஷ கவிஞன்தண் டமிழாற்செய்து
வாசமாய்க் குருகைதன்னில் வாழ்பராங் குசசரித்திரம்
பேசநற் பெரியோரென்சொற் பிழைபொறுத் தருள்வரன்றே.

## தோடயம்

4. க ஜயபக்த ஜநகருணா ஜயஸகல பூசரண
ஜயஸரோ ருஹசரண
ஜயவகு ளாபரண ஜயஜய ஜயரூப
ஜிதமதந ஜயஜபஸ்ரீ
ஜயமதுஸூதந ஜயகலா நிதிவதந
ஜயகுந்த ரதந ஜயஜய

Koviloor Digital Library



உ தென்னுமறைத் தமிழ்விசித்திர திருவிசாக நக்ஷத்திர
வள்ளற்காரி யருள்புத்திர மாதவசரித்திர-ஜயஜய

௩ மங்களம் மகிழ்மாறற்கு மங்களம்-நாளும்
நங்கைசு தாகரனுக்கு மங்களம் மங்களம்

௪ கங்கையின்கரை மதுரகவிக் கந்தரங்கப் பொருள்
எங்கும் விளங்கவே உகந்தியம்பினற்கு மங்களம்

௫ நாலாயிரப் பிரபந்தமும் நாதமுனிக் குரைக்க
மாலெனுஞ்சொல் நம்மாழ்வாராய் வந்தவற்கு மங்களம்

௬ அங்ககத்தியன் றவைத்தா லருமறைத் தமிழ்பாடுஞ்
செங்கை முத்திரையின் ஞானதேசிகற்கு மங்களம்
மகிழ்மாறற்கு மங்களம்.

அகவல்

5. அருள்மிக நிரம்பும் அகத்தியன் செந்தமிழ்ப்
பொருளுயர்ந் திலங்கும் பொதியமா மலையான்
வருகயல் தாவும் பொருநையா றுடையான்
பொழிமலர்த் தேன்சொரி வழுதிநன் னாடன்
திருவளர் கின்றதென் குருகைமா நகரான்
மருவணி செண்பக வகுளமா லிகையான்
கரியமா முகிலெனுங் கரிபரி யுடையான்
விருதனக் கொடியும் முரசுமூன் றுடையான்
சேனுல கெங்குந் தெரிசனத் தாபகன்
ஆணையென் றுரைக்கும் ஆக்கினை யுடையோன்
அடையலர் சிங்கம் அகளங்க துங்கன்
கொடையினிற் கன்னன் கொற்றவன் காரி
தந்த பராங்குசன் சரித்திரந் தன்னைச்
செந்தமி ழாலே செப்புமா கமங்கள்
நானிலம் புகழும் நைமி சாரண்யந்
தானதில் நாளுந் தவங்களே புரியும்
மகத்துவ முனிவர் அகத்தியன் தமிழை
மகிழ்ச்சி பெறுமல் இகழ்ச்சியாய்ச் சொல்ல
இமவான் வரையில் ஏகி அகத்தியன்
தமிழினுல் முத்தி தான்பெறத் தவமுன்
செய்பவை குண்டர் சேவையும் அளித்து
வய்யம்என் குருகை வந்தவ தரித்து

Koviloor Digital Library



சித்தமாய்த் தமிழ்க்கு முத்தியுந் தருவோம்
என்றகத் தியன்பால் அன்றுதா னுரைத்தான்
காரியும் நங்கையைக் கல்லியாணஞ் செய்து
பேரினி விளங்கப் பிள்ளையி னைசையால்
ஆதிநா தரைப்பொன் அடியிணை போற்றத்
தீதிலா திருக்குந் திருக்குறுங் குடிமால்
நாதனே புத்திரன் நல்குவ னென்ன
மாதுடன் ஏகி மாதவம் புரிய
அப்போது நம்பியும் ஆகாச வாணியாய்
இப்பிறப் பினிற்சேய் இல்லையென் றுரைக்க
அரசனுந் தான்கேட் டாற்றமப் பொழுது
நரகரி நம்பி நாமே உமக்குப்
பிள்ளையு மாவோம் பெருமைசேர் மன்னு
உள்ளமுந் தான்மகிழ்ந் துவந்துசெல் கென்னச்
சீர்வளர் தாந்த க்ஷேத்திரம் வந்தான்
கார்முகில் நம்பி கருணையால் நங்கை
கர்ப்பமு மாகிக் காதலன் உதிக்கக்
கற்பகக் கரத்தான் காரிரா ஜேந்திரன்
விரித்திடும் விதைகள் வேதியர்க் களித்து
கருத்தினில் மிகவும் களிப்புடன் இருக்க
அன்னை முலைப்பால் அருந்திலன் மைந்தன்
என்னஓ! என்றே இருக்கவு மீநாள்
காப்பிடப் பிள்ளைமா ராப்புட னங்கு
குத்தவுங் காது குறத்திமெய்க் குறியும்
ஒத்ததைச் சொல்ல உகந்தாதி நாதன்
சந்நதி தனிற்சேய் தனைக்கொணர்ந் திடவும்
பன்னகப் புளிக்கீழ்ப் பராங்குச னிருக்க
வயித்தியர் வந்து சயித்திய உஷ்ணம்
சொல்லவு மேனோ யில்லையென் றுரைக்க
சாத்திரக் காரர் பார்த்துச் சாதகமும்
திருப்புளி யின்கீழ் இருப்பனென் றுரைக்க
மாதவம் புரியும் மதுர கவிக்கே
ஆதித்த னுந்தெற் கவதரித்தது போல்
சேவையும் அளிக்கத் திருக்கோ ளூரான்
ஆவலாய் வந்தே அடிபணிந் தேத்திச்
"செத்தத்தின் வயிற்றிலே சிறியது கிடந்தால்
எத்தைத்தின் றெங்கே இருக்குமோ" என்ன
"அத்தைத்தான் தின்றே அங்ஙனே கிடக்கு" மென்
றுத்திரம் சொல்ல உகந்தந்த முனிவன்
வன்சட கோபன் வருமுறை யெல்லாங்

Koviloor Digital Library



கன்களி கூரக் காரியர்க் களிக்கச்
செய்திடத் தாந்த ஷேத்திர மேவ
மைமுகில் வண்ணர் வைகுண்ட ரப்போ
செந்தமிழ்ப் பிரபந்தஞ் செப்புமென் றுரைக்க
வந்து நாற் றெட்டு மால்தென் குருகைச்
சேடப் புளிக்கீழ்த் தேசிகா எம்மைப்
பாடுமென் றுரைக்கப் பராங்குச னப்போ
திருமறைத் தமிழந் தாதி விருத்தம்
திருவா சிரியமுந் திருவாய் மொழியும்
உரைசெயப் பிரபந்தம் உலகோர் படிக்கப்
பாதகி பெறலாற் பிரபந்தமு மிறக்கத்
திருவளர் விஷ்வக் சேனரை யழைத்துத்
தாணியில் பிரபந்தந் தானினி விளங்க
வாரண முரைக்கு மந்தண ராக
வீரநா ராயணன் மேவு தலத்தில்
மாதவம் புரியும் நாதமா முனியாய்த்
தாணியி லுதித்து வருகுவீ ரென்ன
நாதமா முனிவரும் போதொரு மறையோன்
ஆரா வமுதனை அருளோ தயத்தில்
பாரா யணஞ்செய் பிரபந்தந் தனிலா
யிரத்துளிப் பத்தும் உரைத்ததைக் கேட்டுக்
குருகையை நோக்கி வரவுமே முனிவன்
பரிவுட னந்தப் பராங்குச னம்பித்
திரமாய்க் கண்ணிநுண் சிறுத்தாம் பைநீர்
நேயமாய்ப் பன்னீ ராயிர முருத்தான்
செய்திடு மிப்போ செங்கையில் முத்திரைக்
கையனும் வாரக் காணலா மென்ன
முனிவனு மந்த மொழிதவ றுமல்
மனமகிழ்ந் துரைக்க வந்தநம் மாழ்வார்
மாதவர் போற்று மாமறைத் தமிழை
நாதமா முனிக்கே நாலா யிரமும்
உரைத்துல கோர்க்கு உரைத்திடு மென்னத்
திருத்தமாய் முனிவன் செப்பவிப் புவியோர்
அனுதின முரைக்க அனுசந் தானமும்
மனமகிழ் பொற்றான் மண்டபந் தனிலே
சேடப் புளியுந் திருமஞ் சனமும்
பாடுந் தமிழ்ப்பிர பந்தக் கோஷ்டிகளும்
தத்துவ முரைக்கு முத்திரைக் கையன்
எத்திசையும் புகழ் நித்தியோத் ஸவமும்
உளங் களிகூர விளங்கனு தினமும்

Koviloor Digital Library



நாகரி முகுந்தன் நம்மாழ் வாராய்த்
திருவவ தாரஞ் செய்திடுஞ் சரிதை
நாடக மாக நவின்றிடும் படிக்கே
காகூ பாடினேன் பெரியோர் பதத்துணை தொழுதே.

விருத்தம்

6. அருக்கன்தெற் குதயமும்போ லாகியே திருப்புளிக்கீழ்
இருக்கும்நற் புகழேபெற்ற எம்பராங் குசன்றன் திவ்விய
சரித்திரந் தன்னையேநற் றமிழினால் பாடி யாட
திருக்குருகூ ரினில்விஷ்வக் சேனருந் தோன்றினரே.

தரு

வேதனையு மளித்த வாதி நாதனையா ராதனை செய்து
பாதமே யனுதினமும் போற்றி மாதவம் புரியும்நம் மாழ்வார்
நாதமுனிக்கும் மதுரகவிக்கும் போதனைசெய் யும்சரித் திரம்பாடத்
தீதுக ளணுகா மல்விஷ்வக் சேனரும் வந்து தோன்றினரே.

வசனம்-விருத்தம்

8. வேத நூ லாகமங்கள் விளங்குமுப் புரிநூல் மார்பும்
ஸ்ரீதர வாசுதேவ ஸ்ரீஹரி கிருஷ்ண வென்றே
தீதிலா திருக்கும் நைமி சாரண்ய க்ஷேத்ரந் தன்னில்
மாதவம் புரிய வேண்டி வந்தனர் முனிவ ரெல்லாம்.

தரு

குச்சன்வஷிட்டன் கௌதமன்-காசிபன்-கூறும் பிருகுவத்திரியன் புவி
மெச்சுந்து ருவாசனுடன் பரத்து-வாசனும்-வியாசன் கவுசிகனும் மிக
உச்சிதமாய்க் கவுண்டண்ணியன்பரா-சரனும்-உலகில் முனிவர் மெச்சு
பக்ஷ முடன்வர நைமி சா-ராண்ணியப்-பதிவந் திருந்தனரே.

விருத்தம்

10. இருந்தந்த முனிவ ரெல்லாம் இருதயம் மிக மகிழ்ந்தே
வருந்தியே வொருத்தர்க் கொருத்தர் வந்தனஞ் செய்து யோகம்
புரிந்திடும் போது நைமி சாரண்யப் புவியிலே தான்
அருந்தவம் செய்வோ மென்று அகத்தியன் தோன்றி னரே.

11. தரித்த துளசி மணித் தாவட முஞ்ஜப மாலையும்
விரித்த சடை முடியும் வெண்பு லித்தோ லாசனமும்
நரைத்த தாடி வீசையும் ஞானமும் மிகுந் தகத்தியர்
திருத்த மாக வேதவம் செய்ய வுமே தோன்றினரே.

விருத்தம்

நகைத்தந்த முனிவ ரெல்லாம் நைமிசா ரண்ணியந் தன்னில்
மகத்துவம் பூமி யிற்கீர் வாணமே முத்தி யல்லால்
அகத்தியன் தமிழி னலே யாவது முண்டோ வென்று
இகழ்ச்சியாய்ச் சொல்கை யாலே யிமக்கிரி தன்னிற் சென்றார்.

Koviloor Digital Library



தமிழ்ப்ரபந் தத்தால் முத்தி தரும்படி மாலை நோக்கி
இமக்கிரி தன்னி லேதான் ஏகியே தவங்கள் செய்யக்
கமைப்பொறி தரித்த மார்பன் கவுத்துவ மணிப் பூணான்
தமைத்தொழு மகத்தி யன்பால் சாமிவைகுண்டர் வந்தார்.

தரு : சங்கராபரணம்

14. அனுதினங் கீர்த்திகள் தேடவே — அடிதொழு
தமரர் களுங்கொண் டாடவே
வனிதையர் சாமரம் போடவே — கந்தர்வர்
மனம கிழ்ந்திசை பாடவே
கனகாத் தினபணி யாடவே — சேவைகளைக்
கண்டு கலிபறந் தோடவே
தினகரன் போல்முடி சூடவே — வைகுண்ட
தேவரும் கொலுவிருந்தார்.

விருத்தம்

பன்னக சயனா போற்றி பங்கயக் கண்ணா போற்றி
உன்னரு ளல்லால் வேறே யுலகினி லுண்டோ வையா
என்னுடைத் தமிழைத் தானே இகழ்ச்சியாய் முனிவ ரெல்லாம்
சொன்னதால் தமிழ்க்கு முத்தி சோதியே தருவீ ரென்றார்.

16. பொய்கையார் பூதத்தார் பேயாழ் வாரும்
புகழ்மழிசை சேரலர்கோன் பெரியாழ் வாரும்
வையகத்திற் றொண்டரடிப் பொடிப்பா ணாழ்வார்
மங்கைமன்ன னுடன்மதுர கவியாழ் வாரும்
அய்யனெதி நாதமா முனியோ டந்த
அனந்தகெரு டவிஷ்வக் சேனருந் தான்
செய்திடுவோ மவதாரம் நாமே யென்று
செப்புகின்ற பரமபத நாதன் சொல்வார் :

17. நகைப்புடன் கலியுகத்தில் நான்தானே நம்மாழ் வாராய்
அகத்திய முனிபே கேளா யவதாரஞ் செய்தே யிந்தச்
செகத்தினில் முக்கிய மான திருக்குரு கூரில் வந்து
மகத்துவ மாய்வி ளங்க மறைப்பொருள் தமிழ்செய் வோமே

வசனம் - விருத்தம்

18. சங்கரா ஜேந்திரன் வேதன் தாந்தனும் பூசை செய்யும்
பங்கய மாமலர்ப்பொற் பாதனா மாதிநாதர்
செங்கையிற் கதையும் வாளுஞ் சிலையுடன் றிகிரி சங்கும்
மங்கைய ரிருவ ரோடும் வந்தவர் கொலு விருந்தார்.

Koviloor Digital Library



தரு

19. எத்திசையும் புகழ்ந் தேத்தவே
எங்கள் ஆதி நாதஸ்வாமி கொலு விருந்தார்.

க சித்தபரி சுத்த கர்த்தஜக தீசன் முத்தியருளும் பிரகாசன்-குரு
கைத் தலத்தில்நிதம் வாசன் பக்தர்க்கு நேசன்
அடிதொழும் (எத்)

உ வில்லணிதோளன் ஜெல்லுலகாளன் எல்லவர்க்குங் கிருபையாளன்-கருங்
கல்லைப்பெண்ணாக்கியதாளன் வல்லிமணாளன் குருநை (எத்)

ந மோகநற்றேகன் யூகவிவேகன் சோகநகத்திரு மோகன் - வெகு
நாகரிக பக்ஷிவாகன் யோக வைபோகன் உல்லாசன் (எத்)

ச ஸ்ரீதர லோலன் வாதியர் காலன் சாதுஜன பரிபாலன் - நாளுந்
தீதிலாச் சற்குணசீலன் வேதானுகூலன் சொல்லுஞ்சதுரன். (எத்)

வசனம் - கட்டியக்காரர் வருகிற விருத்தம்

மட்டிலாத் தவங்கள் செய்து மண்ணினிற் கீர்த்தி பெற்றோன்
நட்டணை யாக வேதான் நாரியர் நடனம் செய்யக்
கட்டளை யிடும்ப டிக்கு காரிரா ஜேந்திரன் வாசல்
கட்டியக் காரன் வந்து களரியிற் தோன்றி னனே.

தரு

21. தொட்டிடு மெரியடியும் — குல்லாய்த்
தோலும் பிடித்துக் கையில் பிரம்புங்கொண்டு
சட்டையு மேயணிந்து — நரைத்த
தாடியும் பல்லையும் காட்டிக்கொண்டு
நட்டணை நடையொயிலும் — காரி
ராஜேந்திரன் கீர்த்திகள் கூறிக்கொண்டு
கட்டியம் படித்துக்கொண்டு — கட்டியக்
காரனும் வந்து தோன்றினனே.

22. எத்திசையும் புகழுஞ்ஜக ராஜசிங்கம்
இங்கிதப் பிரசங்க அக ளங்கதுங்கன்
மத்தகெசப் புயன் ரத்தின மருடமின்ன
மனுநீதி கீர்த்திவளர் மன்னர்மன்னன்
சித்திரநவ மணிவிளங்க மண்டபத்தில்
சிங்காதனக் கொலுவிற் சகமாள்கின்ற
கர்த்தனென்றும் போர்க்கழியார் பூபாலனீன்ற
காரிமகா ராஜன் கொலுவிருந்தான்.

Koviloor Digital Library



## கோலு - தரு

23. மாநிலா மனிசூட—மனுநெறி கீர்த்திதேட
காசினி புகழ்ந்திட—கந்தர்வர் கானம் பாட
வீச சாமரை போட—மெல்லியர்களு மாட
ராஜரீக வேள்காரி—ராஜன்கொலு விருந்தான்.

## விருத்தம்

24. இருபுறம் கவரி வீச இங்கிலத் தவர்கள் வாழ்த்த
அரிவையர் நடனஞ் செய்ப அடையலர் பணிந்து ஏத்த
கருடவா கனமால் தன்னைக் கழலிணை போற்றி செய்யுந்
திருவைவாழ் மார்ப ராஜன் சிறப்புடன் கொலுவிருந்தான்.

## தரு

சகலகலை நிபுண யூகன் - திருவண்பரி - சா ரம்பதியாள் வைபோகன்
ஜெகமரசர் புகழ் விவேகன் - மனுநிபுண - தீரப்பிரதா பேந்திரயோகன்
ககனவாம் பரியின் வாகன் - கீர்த்திவளர்-கர்ணனென அருளுந்தியாகன்
மகாராஜ ராஜரீகன் - திருவைவாழ் - மார்பனும் கொலுவிருந்தார்.

## உடைய நங்கையார் வருகிற விருத்தம்

26. கண்கள்களி கூர்ந்திடவேற் கணைகள் பாயக்
கத்தூரித் திலகநுதற் காந்தி மின்ன
வண்பரிசா ரப்பதியில் மேவு கின்றோன்
மண்டலத்திற் கீர்த்திவளர் மன்னர் மன்னன்
திண்புபகல் செந்திருவாழ் மார்ப னீன்ற
செல்விவத னம்பூர்ணச் சந்திர னென்ன
பெண்கள்குரு பீடமன நடையி லங்கப்
பெண்பெருமா னுடையநங்கை தோன்றி னாளே.

## தரு : புன்னாகவராளி

27. க இங்குல கெங்கும்பொற் பங்கயப் பதம்போற்றும்
நங்கையார் தோன்றினாளே :
குங்குமத் திலதமுந் தங்கரேகை போற்றீட்டிப்
பைங்கிளி மொழிதிகழ் பெண்கள் கிரீடி. (இங்கு)

உ செயமதன ரதியோ வென்றுயர் செம் பொற்றுகிலுடையும்
புயல்தவழ் மலர்ச் சடையும்
நயமுமின்னிடையும் நற் செயல் கதளியின் துடையும்
கயல்விழிக்கணை கொண்ட வொயிலன்ன நடையும் (இங்கு)

Koviloor Digital Library



௩. கொங்கை நற்பணியாடத் திங்கள் வதன மிலங்க
அங்கசனுங் கலங்கச் செங்கையிலணி ரத்தினத்
தங்கவளைகள் குலுங்க
இங்கித மிருது வாக்கியங்களுந் துலங்க (இங்கு)

௪ தெண்டனெனப் புகழ்ந் - தண்டையில் பெண்களும்
புண்டரீகக்கண்களும்
கண்டசரம் பூண்ட விண்டெனுங் கரங்களும்
தண்டைசிலம் பொலி கொண்ட பாதங்களும் (இங்கு)

## விருத்தம்

திருவைவாழ் மார்ப னீன்ற செய்யிழை நங்கை யாரை
தருவான காரி யர்க்குத் தந்திட எழுதி யோலை
துரியமா யனுப்ப வேண்டித் தூதனென் றோட்டக் காரர்
அரைநிமி ஷத்தில் இங்கே அழைப்பியென் றுரைக்க வந்தார்.

## தரு

29. கிறுக்குத் தடியும் முறுக்கு வீசையும்
கீத்து நாமத் திலத நெத்தியும்
பிலுக்கு நடையுங் கிரிச்சுச் செருப்பும்
பிடித்த வாளும் தரித்த தோளும்
தலைக்குல் லாயு மிடையிற் காவிச்
சல்லட மும்கச்சை யிறுக்கியிவ் வுலகில்
மலைக்க வேயந்த ஒட்டக் காரர்
மன்னர் சமுகந் தோன்றி னாரே:

## விருத்தம்

வந்திடும் ஒட்டக் காரர் வண்பரி சாரந் தன்னில்
இந்தரை க்ஷணமே நீங்கள் ஏகியே யிந்த வோலை
சிந்தையு மகிழ்ந்து ஈந்தே திருவைவாழ் மார்ப ருக்கே
வந்தனஞ் சொன்னோம் என்றே வழுத்தியே செய்தி சொல்வீர்.

வண்பரி சார மேவு மன்னவா கேளா யுன்தன்
பெண்பெரு மாளென் றோதும் பெயர்வளர் நங்கை யாரைத்
திண்புயல் காரி யர்க்கே தேவியு மாக வேதான்
கண்களி கூர இப்போ கன்னிகா தானஞ் செய்வீர்.

Koviloor Digital Library



## வசனம் : விருத்தம்

நல்லதென் றேயுரைத்து நகரிக ளலங்க ரித்து
வில்லணி மார்பன் காரி வேந்தனைக் குறித்து நங்கை
வல்லியைத் திருவாழ் மார்பன் மகிழ்வுடன் தருவோ மென்று
கல்லியாண முகூர்த்த மிட்டுக் களிப்புடன் வரச்சொன் னரே.

பூவுல கெங்கும் போற்றும் போர்க்கழி யாத பூப
தேவரீர் குமார னுக்கே சேயிழை நங்கை யாரைத்
தேவியு மாக வேதான் செய்யவும் பந்த லிட்டுப்
பாவலா யாய்மு கூர்த்தம் பண்ணவும் வரச்சொன் னரே.

தோரணி மன்னர் சூழச் சிவிகைவெண் குடைது லங்க
வீரண முரசெக் காளம் மேளதா ளம்மு ழங்க
வாரணப் பரிக ளோடும் வண்பரி சாரந் தன்னில்
தாரணி புகழக் காரி தான்மணஞ் செய்ய லுற்றான்.

## சிந்து : தரு

35. க காரியெனு மகராஜர் மணஞ் செய்தானய்யா
நங்கையார் தன்னை (காரியெனு மகராஜர்)
காரியெனு மகராஜன் களிக்கக்
காமனுமே யதைக்கண் டொளிக்க
சூரிய சந்த்ரன் போற் பரி மளிக்க
தோகையர்களும் பன்னீர்கள் தெளிக்க (காரியெனு)

உ சந்திர சூரியப் பிரபை வச்சிரச் சுட்டி-தகதகென
பந்தலிட் டழ காகவே கெட்டிப்-பதுமைகளும்
விந்தை யாகவே பளிங்கு கட்டி-விரை வகைகள்
அந்தமாய்ப் பாலிகையினிற் கொட்டி அரசாணிமுன்.

மாந்தளிர் தேங்காயும் விஷ்வக்சே னரைவிதித்து மனமகிழ்ந்து
சாந்துபுனு கனிந்துதா ளிணைகளைநன் றுய்த்துதித்துத் தயவுடனே
ஏந்துநவ மணிகள்கா ணிக்கையா கவேபதித் திவ்வுலகாளும்
வேந்தர்களை வருந்தா முளமகிழ்ந்து சம்மதித்து வில்லுங் கதையும்

நேமி சங்கமும் மணியாதி நாதரைப் பணிந்தேத்தி- நிகநிகெனப்
பூமலர் கொணர்ந்து பொற்றிருவடிகளில் நன்றாய்ச்சாத்தி-பூபதியான
மாமனென்னுந் திருவாழ்மார்பனை வந்தடிபோற்றி-மாதா பிதாவுந்
தாமுளமகிழ்ச் சிந்தத்தரணியில் விளங்கிய கீர்த்தி சம்பவமுடன்

Koviloor Digital Library



முப்பத்து முக்கோடி தேவர்கொண் டாடமுனி
நாற்பத்தெண் ணாயிரத் தனைவருங் கூட
செப்பிளங் கொங்கையர் மங்களம் பாட
ஒப்பிலா நங்கையோ டூஞ்சலு மாட (காரியெனு)

நெத்தியி லணிகத்தூரிப் பொட்டும் மிகமிகென
சித்திரம்போலே யழகாயிட்டும் செம்பொற் கொங்கையில்
ரத்தினப்ப ணியும்ரவிக் கைதொட்டும் நளினமலர்
ஒத்தஇந்திர நீலவர்ணப் பட்டும்உடை யழகும்

வண்பரிசா ரமெனும்பதி யாளுமுல் லாசமன் னவனருளப்
பெண்பெரு மாள்பெயர் நங்கையா மெனப்பேசப் பெருமைவளர்
திண்புயங்க ளில்நற்குங் குமவாடை கள்பூசத்தேன் மொழிமாதர்
கண்களிகூ ர்வேசெங்கை யால்கவரி கள்வீசக் கணைகள்பாய.

கூரிருவி ழிகளுக்கஞ் சனமழகாய்த் தீட்டிக்கு ழல்விடுத்து
வாரிமுடித் தலங்கார மாய்மரும லர்சூட்டிமா னிலந்தன்னில்
பேரணியெங்கும்விளங்கியபெண்கள்கிரீடி பேசக்கேள்மன்னன்
காரியின் மனைவியென்றே ஜயவிருது கள்நாட்டி கமகமென

சந்தனம் புனுகு மணிந்து சவாது
சந்திர காந்தியின் மேடையின்மீது
சிந்தையு மிக மகிழ்ந்திடவுமப் போது
சிங்காசனத் திலிருந்தனள் மாது (காரியெனு)

கந்த கத்தூரி பரிமளிக்க கருத்தி லன்பாய்ச்
செந்திருவாழ் மார்பனுங் களிக்க தெய்வ ரம்பையர்
வந்து மன்னர்க்குப் பன்னீர்தெளிக்க மருவு மலரோ
டந்தமாய்ச் சுருள்களு மளிக்க அந்தணர்களும்

நாழிகைபார்க்க வென்றோடி வந்தடிக ளளக்க-நாதகீதங்கள்
கோடிமுழங்கவே பூர்ணகும்பம் விளக்க - கொடுங்கை கட்டும்
வாழைகள் தெர்ப்பைகள்வைத்து சமித்துத்துலங்க - மாமறையோர்கள்
சூழவே மந்திரஞ் சொல்லியே ஓமம் வளர்க்க தொனிவிளங்க

நாகரீகத்துடன் நாகேசு மேளமடிக்க நலமுடனே
நாக சுரதிருச்சின்ன மெக்காளம் பிடிக்க நாளுமிந்திர வை
போகனெனக் கட்டியங்கள் புகழ்ந்து படிக்க புளகிதமாய்த்
தோகையர் வந்தடி போற்றியே பரதம் நடிக்க சுகந்தவாடை

Koviloor Digital Library



வீசவுமே பதிங்காத மளாவ
வேதியர் மணமிடுமென்றவர் கூவ
தேச ராஜர்கள் பூமாரிகள் தூவ
சீர்வளர் தாங்க க்ஷேத்திரமேவ (காரியெனு)

## விருத்தம்

36. காரியும் நங்கை யாரைக் கல்யாணஞ் செய்து வந்து
தாரணி யாண்டு கொண்டு சதிருட னிருக்கும் போது
பேரினி விளங்க வேதான் பிள்ளையும் வேண்டு மென்று
வாரணி தனத்தாள் நங்கை மனைவியோ டேது சொல்வான்

## தரு

37. க கீர்த்தி சோதி தங்கையே—ஆதிநாதரைப்
போற்றி வருவோம் நங்கையே

உ எத்தமாய்க் குருகையில் வீற்றிருக்கு மால்தன்னை
தோத்திரமுஞ் செய்து பிரார்த்தனை நிறைவேற (கீர்த்தி)

௩ தூயன் பஞ்சவற்குச காயன் ஆனெயுண்கனி
வாயன் நமக்குநல்ல சேயனுந் தருவார்காண் (கீர்த்தி)

ச சீலன் ஸத்ஜனபரி பாலன் அமரர்க்கனு
கூலன் நமக்குநல்ல பாலனுந் தருவார்காண் (கீர்த்தி)

ரு தீரன் மரதக சரீரன் சகலஜன
தாரன் நமக்குசற்கு மாரனுந் தருவார்காண் (கீர்த்தி)

சா செந்திரு வளர்மார்பன் இந்துவதனன் அர
விந்தலோசனன் நல்ல மைந்தனுந் தருவார்காண் (கீர்த்தி)

எ எத்திசை பணியுங்க வுத்துவ மணிமார்பன்
சித்தமகிழ்ந்து நல்ல புத்திரனுந் தருவார்காண் (கீர்த்தி)

## விருத்தம்

38. சங்கரா ஜேந்திரன் பிரமர் தாந்தனும் பூசை செய்யும்
பங்கயப் பதனே புத்திர பாக்கியம் மடியே னுக்கு
விங்களமெல் லாம் வீய வேணுமென் றுரைத்துக் காரி
நங்கைப் ருடனே யாதி நாதனைப் பணிகின் றுளே.

Koviloor Digital Library



39. மேதினி யாளுங் காரி வேந்தனும் போற்றி நிற்க
அதிநா தனுமு கந்து அன்புடன் தெற்கு வீட்டில்
நீதிலா திருக்கு மந்தத் திருக்குறுங் குடிமால் நம்பி
பாதமே பணிந்தா யாகில் பாலனுந் தருவா ரென்றார்.

## தரு: புன்னாகவராளி

40. வாராய் நீ நங்கையாரே — நமக்கு மைந்தன்
வரமும் தருவ ரவரே.

க நாராய ணவென்று நம்பிமால் தனைத் தியானம்
பாராய ணமேசெய்தால் பலித்திடு மேசந் தானம். (வாராய்)

உ வானமா மலைவாசனை
மாமலர்த் திருவடிபணிந்து சர்வேசனை
தேனே குறுங்குடியிற் செழிக்கும் பிரகாசனைத்
தெரிசித்து வருவோம் நம்பிமால் ஜகதீசனை (வாராய்)

ந பத்தர் பணியும் பொற்றாளன்
பதுமலோசனன் பரமபுருஷ தயாளன்
எத்திசையுமே புகழ்ந்தேத்து மேழைபங்காளன்
இதயானுக்கிர கனிவனென்றும் நற்பேராளன். (வாராய்)

ச இகபர மறிவதற்கும் புத்திரனில்லாற்கு
இல்லையென்று சொல்வார் சொர்க்கம்
சகல பாக்கியமும் பெற்றுத் தானென்ன நிலைநிற்கும்
தவத்தால்ச் சந்ததிபெத்தால் தழைக்கும் நம்முட வர்க்கம். (வாராய்)

ரு ஆதிநாதன் சொல்ப்படிக்கே நாமிருவரும்
அடிமை யாயவர் குடிக்கே
மாதே செல்லுவோம் நம்பி மாலின் திருவடிக்கே
வணங்கித் தவங்கள் செய்வோம் மைந்தன் வரும்படிக்கே. (வாராய்)

## விருத்தம்:

41. அறங்களும் விளங்க நாளும் அவனியிற் காரி ராசன்
சிறவனும் வேணு மென்று செய்திடுந் தவத்தி னாலே
நிறங்கள்சேர் சங்கும் வாளும் நேமியுங் கரத்தி லேந்தி
குறுங்குடி நம்பி மாலுங் கொலுவினி லிருக்கின் றாரே.

Koviloor Digital Library



## தரு: கல்யாணி

42. க நானிலமெங்கும் புகழ் திருக்குறுங்குடி
நம்பிமால் கொலு விருந்தார்
வானவர் நிதம் வந்து தொழும் பொற்றாளன்
வண்டலரியு மரு மாமலர்க் கண்ணன்
கொண்டல் தவழ்மேனி கொண்ட மணிவண்ணன். (நானில)

உ பாதஞ்சிலம் பொலி கொஞ்ச - சேவையைக் கண்டு
பறந்து கலிகளு மஞ்ச
சீதள சந்திரவதன வொளிகள் மிஞ்ச
திகிரி சங்கமுஞ் சிலையு மிலங்கவே
மகிமை கவுத்துவ மணியும் விளங்கவே. (நானில)

௩ தாதமர் கமலக் கையும் - தகதகென
தபனன் விளங்கிய மெய்யும்
தோதகமாகச் சூழ்வினைகளைக் கொய்யும்
சுந்தராந்திகழப் பந்துமுலை மாதர்
விந்தை நயனமுஞ் சிந்தை மகிழ்ந்திட. (நானில)

௪ தண்டுளப மணிதோளன் - செய் கிருபையாளன்
தரணியளந்த பொற்றாளன்
வண்டலரி மலர்க்கையில் கெதையும் வாளன்
மாதர்களும் வெண்சாமரைகள் போடவே
வேத நாத சங்கிதம் பாடவே. (நானில)

## வசனம்: விருத்தம்

43. வேதனை யளித்தாய் போற்றி விண்ணவர்க் கரசே போற்றி
பூதல மளந்தாய் போற்றி புதல்வனுங் தருவாய் போற்றி
ஸ்ரீதர மார்பா போற்றி திருக்குறுங் குடியில் மேவும்
நாதனே யென்னையாள் கின்ற நம்பியே போற்றி போற்றி.

## வசனம்: சௌராஷ்டிரம்:

44. க உன்னை நம்பினேன் நானே
பின்னை வேறில்லை தானே
இந்நிலம் புகழ் பொற் பாதா
என்னையாளும் நம்பி நாதா (உன்னை)

உ அடியவர்க்கரு ளாளா-அணிசேர் துளவத் தோளா
முடியழகிய பொற்றாளா-முகமலர்ந் தென்னையாளா
(உன்னை)

Koviloor Digital Library



௩ கல்விப் பொருள்களைத் தேட-கருத்தில் நித்தம் கொண்டாட
வல்வினைகள் பறந்தோட-வாழ்குறுங்குடி நாட (உன்னை)

௪ அனுதினங் கிருபை பார்க்க-அடியேனையும் தற்காக்க
மனதன்பாய்ப் பரமேற்க-மைந்தன் கலியைத் தீர்க்க (உன்னை)

## விருத்தம்

45. தீர்க்கமாய்க் காரி மன்னன் தேவியுந் தானு மாக
கார்க்குழ லேமி நம்பி கழலிணை போற்றி நிற்கும்
மார்க்கமு மறிந்தா காச வாணியு மன்னு வுந்தன்
பேர்க்கிந்தச் சென்மந் தன்னில் பிள்ளையு மில்லையென்றார்.

46. பிள்ளையில் லார்க்கு முத்தி பெறுவது முண்டோ வென்று
உள்ளமு மிகத்த ளர்ந்து உருகியே மேனி வாடி
வெள்ளமாய் விழிநீர் சோர வேந்தனென் றேதுங் காரி
வள்ளலும் நம்பி மாலே வருந்தியே புலம்ப லுற்றான்.

## புலம்பல் : தரு

47. ௧ உன்தன் பாதங் கதியல்லாலிந்த
உலகினில்வேறு முண்டோ நம்பிநாதா—நான்
மைந்தன் இல்லாப் பாவியென்றே
நிந்தனைக்கா ளாகவிதித் தாயோ நம்பிநாதா

௨ கர்த்தனே யுன்பாதமெனக்
குற்றதுணை யென்றிருந்தேனே நம்பிநாதா—நான்
புத்திரனில்லாப் பாவி யென்றே
பித்தனென்றுஞ் சொல்லவிதித் தாயோ நம்பி நாதா

௩ ஆலயம டைத்துவைத்த
சாலைவெட்டி வீடுகட்டி னேனே நம்பிநாதா—நான்
பால னில்லாப் பாவியென்றே
ஞாலமும்ந கைக்கவிதித் தாயோ நம்பிநாதா

௪ வேலியடைத் தபயிரைக்
காலிகளை விட்டழித்தேனோ நம்பிநாதா—நான்
கூலியைக் குறைத் தளந்து
சூலிகளைக் கண்டுபிரமித் தேனோ நம்பிநாதா

௫ தெள்ளுமறை யோர்பொருளைக்
கொள்ளையிட்டுக் குடி கெடுத்தேனோ நம்பிநாதா—நான்
பிள்ளையில்லாப் பாவியென்றே
யுள்ளமுமுரு கவிதித்தா யோ நம்பிநாதா

Koviloor Digital Library



௬ விற்கும் விலைகள் குறைத்தக்ரமமாகப்
புளியாண்டேனே நம்பிநாதா—இப்போ
மக்களில்லாப் பாவியென்றே
சொர்க்கமில்லை யென்றுவிதித்தா யோநம்பி நாதா

௭ நல்லோர்களைக் கண்டு நானும்
பொல்லாங்குசொல் லியேதூஷித் தேனே நம்பிநாதா
வல்லமைபே சியேபிற
ரில்லாளைக்கூடிப் பாவஞ்செய் தேனே நம்பிநாதா

௮ மண்தனிலோ ரங்கள்சொல்லிப்
பெண்கொலைகள் செய்யவுஞ்சொன் னேனே நம்பிநாதா
கண்களாலே பார்த்து நல்ல
தண்கரைகளை வெட்டிவிட் டேனே நம்பிநாதா

௯ தந்தைதாய்க ளைக்குருவை
நிந்தனைகள் சொல்லித்திரிந் தேனே நம்பிநாதா—இப்போ
தொந்த வினைகள்சூழ்ந் திடச்
சந்ததியில்லாப் பாவியானேனே நம்பிநாதா

௧௦ நித்தியகர் மங்கள்விட்டு
சத்தியந்த வறித்திரிந் தேனே நம்பிநாதா—நான்
பெற்ற பிள்ளை களைச்சிறை
வைத்துப் பணங் கொடென்றடித்தேனே நம்பிநாதா

௧௧ பசுகத்தவுங் கன்றுக்குப் பாலைச்
சற்றும் விடாமலே கறந்தேனே நம்பி நாதா நல்ல
பத்தி வி மங்கையர் களைக்
குத்தஞ் சொல்லிப் புணர்ந் தேனே நம்பி நாதா.

## விருத்தம்

48. தேவியைப் பார்த்து மன்னன் திகைத்தவன் சிறுவ னில்லாப்
பாவியு மானே மென்று பாதவித் துருகி யேதான்
ஆவியும் பதைக்கு தையோ அரிகரி நம்பி யென்றே
கூவிய மனைவி யோடுங் குனிந்தவன் போற்றி செய்தான்.

49. போற்றியே காரி மன்ன புகலுவோம் கேளா யுந்தன்
கோத்திரம் விளங்க வேநாங் குமாரனு மாவோ மென்றும்
ஏத்தமாய் நீயு மிப்போ திவ்வுல காண்டு நாளும்
கீர்த்திகள் பெறுவா யின்னம் கிலேசமென் விட்டி டாயே.

Koviloor Digital Library



50. மாசிலா முடி தரித்த மன்னவன் காரி ராசன்
வாசமாய்த் தாந்த க்ஷேத்ரம் வந்தபின் நம்பி மாலும்
பேசின படிக்கு நாமே பிள்ளையு மாவோ மென்ன
காசினி விளங்க நங்கை கர்ப்பமு மாகி னளே.

51. மைப்புயல்குழலாள்கற்ப மசக்கையால் முகம்வெளுத்
தப்பொழு தைந்து மாத மாகவு முடல் கனத்து
செப்பிள முலை கறுத்துச் செல்லவும் பத்து மாதம்
சப்பைவாய் மருத்துவச்சி தானவள் தோன்றி னளே.

தரு

முலையுந் தோல் துருத்திபோல - முகமுந் திரங்கி யேதான்
தலையும் பஞ்சி போல - மிகத்தா னரைத்து
எலிக்கண் பீளைகள் சோர - இரும்பி யிரைத்துடல்
குலுக்கக் குலுக்கக் கையிற் — கோல்பிடித் தந்த
மருத்துவச்சி தோன்றி னளே — ஐயா அந்த
மருத்துவச்சி தோன்றி னளே.

விருத்தம்

53. மருத்துவம் பார்க்கும்போது மைந்தனு மவதரிக்கக்
கருத்தினில் மிகமகிழ்ந்து காசிரா சேந்திரனப்போ
விரித்திடும் விதைகள்தானம் வேதியர்க் கேயளித்துத்
துரைத்தன முடனேமன்னன் சுகமுட னிருந்தகாலை.

54. இருந்திடும் பொழுதுநங்கை யிவ்வுல களந்தநம்பி
தருந்தவப் பாலனென்று தானுள மிகமகிழ்ந்து
வருந்தியேயெடுத்தணைத்துமடிமீதில்வைத்துக்கொண்டு
திருந்தவுமே தாலாட்டுச் செப்பியே மகிழலுற்றாள்.

தாலாட்டு

சூரியன்போல் தெற்குதையந் தோன்றவுமே மேனியெங்கும்
காரி குலம்விளங்கக் கண்மணியாய் வந்தவரோ. (1)

வாரிக் கனகரத்தினம் மாமறையோர்க் கேயளிக்கும்
காரிக்குப் பிள்ளைக் கலிதீர்க்க வந்தவரோ. (2)

Koviloor Digital Library



வள்ளலென்னுங் காரி வரங்கேட்க நம்பியென்பாற்
பிள்ளைக்கலி தீர்த்த பெருமானே கண்வளரீர். (3)

சிறுகுழந்தை வேணுமென்று செய்தவத்தாற் காரியார்க்கே
குறுங்குடியில் மேவுநம்பி கொடுத்த மகனோ. (4)

ஆணிப்பொன் னேயமுதே யடிதொழுது வேந்தரெல்லாம்
காணிக்கை கொண்டுவருங் காரி மகனோ. (5)

கழுவாத நன்மணியோ கண்ணூர்ந்த கற்பகமோ
வழுதிவள நாடாள வந்துதித்த குஞ்சரமோ. (6)

சந்ததியும் வேணுமென்று தவஞ்செய்த காரிமன்னன்
சிந்தைக் கவலையெல்லாந் தீர்த்த தயாபரனே. (7)

சேவித்துக் கைகட்டித் தேசமெங்குந் தான்புகழப்
பாவித் தரசாளும் பாலகனென் பால்குடியாய். (8)

தங்கவளைக் கைவீசித் தவழ்ந்துமடி மீதிருந்து
கொங்கை சுரக்குதடா குழந்தாய்நீ பால்குடியாய். (9)

விருத்தம்

56. பாலையு மேகுடிக்கப் பரபரத் தழுதுகையும்
காலையு முதறிக்கொண்டு கண்ணையும் திறந்துபாராப்
பாலனைக் கையிலேந்திப் பதைத்துட லுருகியேதான்
வேலினேர்விழியாள்நங்கைவிசாரமிட்டரற்றலுற்றாள்.

சிந்து தரு

57. கோடான கோடிதவ மாச்சுதோ மகனே—யென்
குழந்தையாய் வந்தநீ கூவியழாயோ யென்மகனே (1)

நாடாளுவாயென்றெண்ணி யிருந்தேனேமகனே-என்னை
நல்லோர்கள் நாட்டில் நகைக்கவுதித்தாயோ மகனே. (2)

அன்னை முலைப்பா லருந்தா திருப்பாயோ மகனே—நா
னுன்னை நம்பியிவ் வுலகி லிருந்தேனே மகனே எந்தன் (3)

Koviloor Digital Library



சிந்தைக் கவலையைத் தீர்ப்பாயென் றெண்ணினேன் மகனே- புவி
மைந்தரைப் போலுன் வாயைத் திறந்தழாய் மகனே (4)
உண்மையாக உன்னைப் பெற்று மகிழ்ந்தேனே மகனே - என்றன்
கண்மணியே யுன்தன் கண்ணைத் திறந்துபார் மகனே (5)
பெற்ற மனதுதான் பித்தாகு தென்செய்வேன் மகனே - நீதான்
சற்றேயுன் சர்க்கரை வாயைத் திறந்தழாய் மகனே (6)
கொற்றவன் காரி குலம் விளங்க வந்த மகனே-யுன்னைப்
பெற்றும் பெருத மல டியு மானேனே மகனே—பிள்ளை (7)
பெற்றுரைக் கண்டு பெருமூச் செறிந்தேனே மகனே – இப்போ
உற்ருர் நகைக்கவுடம் பெடுத்தே னேயோமகனே—இந்தக்(8)
கோட்டிகள் கொள் ளுங் குறுங்குடி மால் தந்த மகனே – என்னைச்
சாட்டைப் பம்பரம்போலாட்டி வைப்பாயோ சொல்மகனே—இந்த
நாட்டில் விளங்கிய கீர்த்தி பெருமலே மகனே—நடுக்
காட்டிலேவீ ணுயெறித்த நிலவானேன் மகனே (10)
பட்டமுங் கட்டியிப் பாருல கையாளு மகனே—செத்தே
வட்ட முலேயுண்ண வாயைத் திறந்தழாய் மகனே (11)
கட்டியங் கூறியெக் காளம் பிடிக்கிருர் மகனே—வெகு
திட்டமா யுன்தன் கண்ணைத் திறந்துபார் மகனே (12)
சீதள சந்திரன் போல் வதனம் பெற்ற மகனே—பெற்ற
மாதாவென் றேயுன் மனதி ரங்காதோ சொல் மகனே (13)

விருத்தம்

சங்குமங் கிலியம் ரத்தினச் சரப்பளி தகத கென்னச்
செங்கயல் வயல்சூழ்தாந்த க்ஷேத்ரம்வாழ் காரிமன்னன்
நங்கைமைந் தனுக்கேயேழா நாளிற்காப் பிடவுமென்றே
கொங்கைகள் குலுங்கக்காது குத்தவுங் குறத்திவந்தாள்.

தரு

59.சிங்கப் பதக்கமுஞ் சங்குப் பணியுமி
லங்கக் குறக்கூடை யிடுக்கியே
தங்க மெனுமிரு கொங்கைக் குடங்கள்கு
லுங்கக் குலுங்கமெய் குலுக்கியே—குறவஞ்சி வந்தாள்

Koviloor Digital Library



பார்த்திபன் தாந்த க்ஷேத்திரம் வளர்காரி
வீற்றிருக்கும் வள நாட்டினில்
தோத்திரங் கள்செய்து சாத்திரம் பகர
மாத்திரைக் கோலுங் கையுமாய்க்-குறவஞ்சி வந்தாள்.

குறத்தி அகவல்

60. குழல்முகில் பிறையின் அழகிய நுதலும்
சிலையிரு புருவம் வலையெறி விழியும்
நலமெனுஞ் செண்பக மலரெனு நாசி
பல்லொளி முல்லை சொல்லிளங் கிள்ளை
வாசமே கமழ்வாய் தேசுநற் குமுதம்
தொனிகுயி லிதழ்மாங் கனிமதி முகமும்
கண்டமுங் கமுகு விண்டெனுங் கரமும்
இளங்கிளி யுகிர்காந் தளுளங் கையும்
கொங்கைகள் திகழ்நல்மாறி பங்கய வரும்பு
காரிரு ளெறும்பு சாரிரோ மாவலி
உந்திநீர்ச் சுழியர விந்தநா லிடையும்
மான்குளம் பல்குல் தான்துடைக் கதலி
ரெண்டு வராலெனக் கொண்ட முழந்தாள்
அரும்பு தெரிந்த குறும்பை கணைக்கால்
பொத்தக மெனுமிரு சித்தடி யழகும்
தாள்பொற் சிலம்பு சதங்கையுங் கொஞ்ச
வாள்விழிக் கணையில் மாதவர் மயங்க
சந்திரசூ ரியப்பிரபை தரளமும் வச்சிர
கொந்தள வோலை கூர்நுதற் சுட்டி
சிந்துரத் திலகந் தீட்டியே யழகாய்
சந்திர வதனந் தகதக தகெனக்
கஞ்சமா மலர்விழிக் கஞ்சனந் தீட்டி
பச்சிள முலைபொற் கச்சணி விளங்கு
கண்டபே ரணம்பொற் குண்டுநற் பவளமுங்
குன்றி மணியுநற் கொத்துடன் வச்ர
கண்ட சரப்பளி கழுத்தணி யாரம்

Koviloor Digital Library



சங்குமங் கிலியந் தரளமா லிகையும்
சிங்கப் பதக்கமுஞ் சிறப்புட னிலங்க
முன்கை முத்தாரி முத்துமூக் குத்தி
தங்கக் கடையமும் சரிகையு மணிந்து
சங்கணி வளைகள்தான் கலகல கலென
கும்கும் வாடை குமுகுமு குமென
மாகன கத்துகில் மளமள மளென
மேகலா பரணம் மிகசல்சல் சலென
ஒட்டியா ணமுடன் இட்டரை ஞாணும்
வடிவுள வெவையும் கடைவிழிப் பார்வையும்
பிள்ளைமா ராப்புங் கொள்ளிறு மாப்பும்
நாடுசெம் பொற்குறக் கூடையும் இடுக்கி
சாத்திரம் பகரும் மாத்திரைக் கோலும்
குறியுரை செய்யும் அறிவுள மெய்யும்
பூசிய கதம்பம் வீசியே காதம்
குமுகுமு குமென கமகம கமென
திருவளர் காரி வரைதனில் மேவும்
அரிவையர் கையில் உரைசெய்மெய்க் குறியும்
மிஞ்சிய புகழ்க்குற வஞ்சிவந் தனளே.

தரு

61. ஞானக் குறத்தியும் வந்தாளையா—ஒய்யாரமாக
ஞானக் குறத்தியும் வந்தாளையா.

ஞானக் குறத்தியும் வந்தாள்
நற்குறி சொல்கையிற் பிந்தாள்
தானிவள் நங்கைக் குகந்தாள்
ததகிட திமிதிமி தலாங்கு தோமென (ஞான) 1

அங்கமி வளடப ரஞ்சி
அன்ன நடைஒயில் மிஞ்சி
பைங்கிளி மொழிபோற் கொஞ்சி
பத்மினி சாதியு தித்தனள் வஞ்சி. (ஞான) 2

Koviloor Digital Library



சங்குமங் கிலியங் கட்டி
சந்திரசூர் யப்பிரபை சுட்டி
செங்கை தனிற்குறப் பெட்டி
சேனுதய சௌந்தரி தலாங்குதோமென.(ஞான) 3

நற்றமிழ்க் கருளுங் காரி
ராசேந்ரன் நாட்டில் சிங்காரி
தத்திமி ததக்கிட தாரித்
தகிடதிமிதிமி தலாங்கு தோமென. (ஞான) 4

குங்கும வாடைகள் பூசி
கொங்கண டங்கண தேசி
தங்க வளைக்கையை வீசி
ததகிடதிமிதிமி தலாங்கு தோமென. (ஞான) 5

ஞானக் குறத்தியும் வந்தாளையா - ஒய்யாரமாக
ஞானக் குறத்தியும் வந்தாள்.

வசனம் — வாசல் தரு (நவரோசி)

62. வாசலிது வாசலிது - அம்மே
மகராசன் வாசலிது அம்மே.
ராசரீக னெனுங்காரி யம்மே
மகராசன் வாசலிது அம்மே. (1)

வன்னமணி முடிதரித்த மன்னர்
வந்துதொழும் வாசலிது அம்மே.
அன்னமுடன் சொன்னங்களு மன்பாய்
அளிக்கும்செம்பொன் வாசலிது அம்மே. (2)

தனதான்ய சௌபாக்யம் மிகவே
தான் விளங்கும் வாசலிது அம்மே
கனதைபெற அனைவருக்கும் அருளும்
கன்னனென்னும் வாசலிது அம்மே. (3)

Koviloor Digital Library



தங்கரத்தின சிவிகைகளும் அம்மே
சந்திரகாந்த மேடைகளும் அம்மே.
மங்களம்போ லனுதினமும் மிகவே
வாழ்வுபெறும் வாசலிது அம்மே. (4)

தேசமெங்கும் புகழ்தாந்த க்ஷேத்திரம்
செழிக்க வந்தோன் வாசலிது அம்மே.
மாசிலாமா முடிதரித்த காரி
மன்னனுடை வாசலிது அம்மே. (5)

பொழிகருணை யாதிநாதர் பாதம்
போற்றுகின்றேன் வாசலிது அம்மே.
வழுதிவள நாடாள இங்கே
வந்துதித்தோன் வாசலிது அம்மே. (6)

சொற்காதி போகம்வள ரிந்த்ர
சுமுகனுடை வாசலிது அம்மே.
சற்குணனும் போர்க்கழியார் அருளும்
தனயனுடை வாசலிது அம்மே. (7)

வசன விருத்தம்

63. வாசநல் தாந்த க்ஷேத்திர மன்னவன் வழுதி நாடன்
காசினி புகழ்ந்து போற்றுங் காரிரா சேந்திர னுட்டில்
வாசலின் மகிமை கேட்டு மனசுசந் தோஷ மாச்சு
தூசிலா துனது சாதி மகிமையைச் சொல்லு வாயே.

தரு

64. சாதியின் மகிமைகே ளம்மே - எங்கள் குறச்
சாதியின் மகிமைகே ளம்மே.

ஆதிநாதரைத் தொழுங் காரி ராசனுட் டணங்கே(சாதி)1

கறுத்தபொற் றுகிலாடை யுடுப்போம் - மனம்
களிக்கக் கொழுந்தனைக் கட்டியணைத்துப் படுப்போம்.
குறத்திகள் பிள்ளைபெற் றெடுப் போம்-நாங்கள்
குழுவனுக் குக்காயம் கூட்டியே கொடுப்போம். (சாதி) 2

Koviloor Digital Library



சங்கையில் லாமல்சஞ் சரிப் போம் - அம்மே
சங்குப்பணியுஞ் சிங்கப் பதக்கமுந் தரிப்போம்
வங்கணவகை தெரிந் துரைப்போம் - செம்பொன்
மலையிற் கனிகளுண்டு மகிமைபெற் றிருப்போம். (சாதி) 3

இட்டமாய்க் கைக்குறி பார்ப்போம் - பெண்கள்
இருதயத்தில் இருக்கின்ற கவலையைத் தீர்ப்போம்
திட்டமாய் அபிமானம் காப்போம் - குறி
செப்பியே செம்பொன்தரச் செங்கை ஏற்போம். (சாதி) 4

காட்டி லகிற் கொம்பு வெட்டிக் - குடிசை
கட்டிக் கவரிமயிர் கனக்கவே கட்டி
மேட்டிமை யாய்க்குறப் பெட்டி - கையில் விளங்க
நாட்டினிற் குறி விளம்புவோம் கெட்டி. (சாதி) 5

வக்கர மணிகுன்றி பூனை - காச்சி
மணியணி வோம்வள்ளி மணவாளன் தானே
திக்கெங்கும் புகழ்படைத் தோனே-யந்தச்
சிவனுடை மகனெங்கள் மருமகன் தானே. (சாதி) 6

வசன விருத்தம்

65. குறிசொல்லுங் குறத்திமாதே கொற்றவன் காரிராசன்
அறிவுடன் தவங்கள்செய்யு மதிசயங்கண்டு அன்பாய்
குறுங்குடி நம்பிமாலுங் குமாரனு மாவோமென்னச்
சிறுவனுக் கின்னதென்றே செய்கையைச் சொல்லுவாயே.

விருத்தம்

66.செய்கையைச் சொல்வேன் காரிதேவிநீ நங்காய்கேளாய்
மைம்முகி லாதிநாத மாலின்சன் னதிக்கேசென்றால்
உய்யவு முலகமெல்லா முத்தமாசுணப்பு ளிக்கீழ்த்
தெய்வமாய் வாய்திறந்து செப்புமுன் மகனுமென்றாள்.

67.வெகுமதி குறத்திக்கீந்து வேந்தனும் நங்கையாரும்
நகைமுகச் சோதியாதி நாதனைப் புகழ்ந்துபோற்றி
செகமெல்லாம் விளங்கவேயான் சிறுவனைப் பெற்றகீர்த்தி
தகைமையும் விளங்கவென்றே யுரைத்துச்சன் னிதியில்விட்டாள்.

Koviloor Digital Library



68. பிள்ளையென் றேமகிழ்ந்தே பெற்றிடும் நங்கையாரும்
வள்ளலென் ருேதுங் காரி மன்னனும் பார்த்திருக்க
உள்ளமு மகிழ்ந்தே யாதிநாதனை புகந்துபோற்றிக்
கள்ளமாய்ப் புளிக்கீழ் மாறன் கைதவழ்ந் தேகலுற்ருன்.

தரு: (மத்யமாவதி)

69. தவழ்ந்தே வரற் சேவையைப் பாரும்-ஞானதேசிகன்
தவழ்ந்தே வரற் சேவையைப் பாரும்.

தவழ்ந்தே மலர்க்கரங்கள் சிவந்திடவும் புளிக்கீழ்
தவம்புரிந் தடியவர் பவங்களை யுமகற்ற. (தவழ்)

தண்டைநூ புரவொலி கொஞ்ச – தழைக்குஞ் சந்திர
மண்டல முகத்தொளி மிஞ்ச - வடிவழகைக்
கண்டே யோடவுங் கலியஞ்ச - கத்தூரிக்காப்பும்
வண்டணி மலர் முத்துக் - கொண்டைகுலுகுலென
கண்ட சரப்பளி கலகலகலென. (தவழ்) 1

சந்திரசூரியப் பிரபையுஞ்சுட்டி – தகதகதகென
விந்தையா கச்சிரசிற் கட்டி - மெய்யர்க்குமெய்யன்
தந்தை தாயையு மெள்ளத்தெட்டி - தானுதிமாலே
வந்தனமும் செய்து – சிந்தை மகிழ்ந்துசேடத்
திந்திருணிக் கீழ்மறைச் செந்தமிழ்பாட. (தவழ்) 2

தொண்டர்க் கன்பான கிருபையாளன் - சோதிச்செழும்
புண்டரீக மலர்ப் பொற்ருளன் - புளகிதமான
தண்டுளப மணிந்த தோளன் - தாழ்வச்சிர
குண்டலங் களசைய எண்டிசை – யனைவரும்
தெண்டனிட்டுச் சேவையைக் கண்டுகண்களிக்க. (தவழ்)3

விருத்தம்

70. விட்டிடும் பிள்ளைதானும் மெள்ளவே தவழ்ந்துவந்து
திட்டமாய்த் திருப்புளிக்கீழ் சிறுவனும் இருக்கும்போது
அட்டதிக் கினிலும் போற்றும் ஐயனென் ருேடிவந்து
வட்டமா முலையாள்நங்கை மைந்தனைப் பார்த்துச்சொல்வாள்.

Koviloor Digital Library


தரு (கேண்டை)

ஆதிநாத ரையுமன்பாய் அடியிணைகளைப் போற்றி
சோதிவாய் திறந்துவார்த்தை சொல்லுவாய்நீ யென்றிருந்தேன் 1
வேதனைக்கா ளாவாயென்று விதித்தானே என்தலையில்
மாதவம்செய்த திதனுக்கோ மைந்தனோநீ யிங்குதித்தாய் 2
வேதியர்கள் வீதிகளும் வேந்தர்களின் வீதிகளும்
தாதியர்கள் வீதிகளும் சற்சனர்கள் வீதிகளும் (3)
ஓதுமறைச் சாலைகளும் ஓங்குகரும் பாலைகளும்
தாதலர்ப் பூங்காவுகளும் தாமரையின் வாவிகளும் (4)
மண்டபவ லங்காரமும் மணிமதிட்கோ புரங்களும்
அண்டர்கள்பரி வாரமும் ஆதிமாலுக் குபசாரமும் (5)
சேடப்புளிக் கீழ்ப்பிரம தியானஞ்செய் திடும்நேசமும்
நாடுந்தென் திருக்குருகை நகரிதனில் வாசமும் (6)
பத்துமாத முஞ்சுமந்து பரிவாக நானுமுன்னைப்
பெத்ததிதுக் கோமகனே பெருமானே யிங்குதித்தாய். (7)
விருதெக்கா ளம்பிடிக்க மெல்லியர்க ளும்நடிக்க
மருமலர் கள்முடிக்க வந்துகட்டி யம்படிக்க (8)
முரசுக ளுமடிக்க முடிமன்ன ரடிபோற்ற
அரசாளா மல்மகனே அய்யனேநீ யிங்குதித்தாய். (9)

வசனம் கலித்துறை

72. திருவவ தாரத் திருப்புளி நீழற் சிறுவனுமே
ஒருகையில் ஞான உபதேச முத்திரை யோங்கியநல்
பெருமையி னுண்மையை நங்கையு மேகண்டு பிள்ளையென்றே
அருமை களுமிட் டழைத்தோடி யேவந் தரற்றினளே.

புலம்பல் தரு கேண்டை

ஐயகோநா னென்னசெய்வேன் அரியதவ மும்செய்தேன்
வையகம்ந கைக்கப்பெற்றேன் மைந்தனில்லாப் பாவியானேன். 1
வள்ளல்காரி ராசன்தானே வரம்பொய்த்த தறியேனே
பிள்ளையென்று மகிழ்ந்தேனே பெற்றும்மல டியானேனே.2

Koviloor Digital Library



இட்டபாக்கி யங்கள்பெற்றேன் இவ்வுலகை ஆண்டிருந்தேன்
பட்டங்கட்ட யாரைவைப்பேன் பாலனேநான் என்னசெய்வேன்

பாலனுமில் லாதபாவி பதைக்குதடா என்னுவி
ஓலமிட்ட ழைத்தாற்கூவி ஓடிவாகு முந்தாய்தாவி. (4)

கொற்றவன் தவம்புரியக் கொங்கைரெண்டும் பால்சொரிய
பெற்றவர்க் குபகரியாப் பிள்ளையுண்டோ சொல்தெரிய. (5)

பெற்றமனம் பித்தாமல்லோ பிள்ளைமன தேதுகல்லோ
உற்றதுகே ளெந்தன்சொல்லோ உன்செவியிற் கேளாதல்லோ.

புதல்வருட னேகூட போய்மகனே விளையாடடா
கதறநான் ஞாயமோடா கண்மணியே கிட்டவாடா. (7)

மாதவத்தோர் போதனையோ மனத்துயர வேதனையோ
ஆதிநாதன் சோதனையோ அறியேன்சொல் நீதானேயோ.

இன்னதென்று அறியேனே ஏதுசெய்வேன் விதியோனே
மன்னவர்க்கு மன்னவனே வாய்திறந்து சொல்மகனே. (9)

விருத்தம்

74. மகத்துவ முடைய நங்கை மன்னவன் காரி ராசன்
திகைத்தவர் விசார மிட்டுச் சிந்தையும் உருகியேதான்
செகத்தினில் விளங்கவேநான் சிறுவனைப் பெற்றதற்கு
நகைக்கிட மாச்சு தென்று ராசனும் வீற்றி ருந்தான்.

வசனம் விருத்தம்

75. வீற்றிருந் தவனுங் காரி வேந்தனும் மைந்த னுக்கே
பார்த்திட வேணும் நாடிப் பரிக்ஷையும் ஆய்ந்து பார்க்க
மாத்திரைப் பையுங் கொண்டு வாகடப் படியு ரைக்கும்
சாத்திர வைத்யர் தம்மைத் தானிங்கே வரச்சொல் வீரே.

76. வாதபித் தங்கள் சேட்பம் மந்திர யந்த்ர தந்த்ரம்
பூதலந் தன்னில் நம்மைப் போலவே யில்லை யென்றும்
தாதுலட் சணவ யித்ய சாத்திரப் படிக்கு நன்ருய்
ஓதுவோ மெனவ யித்யர் உசிதமாய்த் தோன்றி னரே.

Koviloor Digital Library



தரு

77. சீதள உட்டிணமும் வாதங் களுக்கந்த
 பிந்தா மணிசந் திரோதயமும்
வாதராட் சஸமாத் திரைகளும் கொண்டு
 வயித்திய ரும்வந்து தோன்றினரே. (1)

சங்கத் திராவகம் பூபதி தாம்பிர
 பஸ்மமுஞ் சொர்ண பஸ்மமுடன்
வங்கண மாய்வங்க பஸ்மமுங் கொண்டு
 வயித்திய ரும்வந்து தோன்றினரே. (2)

இந்தவுல கிற்பில்லி சூனியங் களுக்கும்
 எதிர்த்த வர்க்குமார் பாணியென்றும்
மந்திர மினுமினுந் தெந்திர மெழுதும்
 வயித்திய ரும்வந்து தோன்றினரே. (3)

கோகர்ண கெசகர்ண வித்தைக ளும்ரச
 குளிகள் மூலிகைக் கிரிகைகளும்
ஆகம மாயக்னித் தம்பமு மோடிக்
 களத்தலா கமும்வாயுத் தம்பங்களும் (4)

மோகனத் தம்பமு டன்சலத் தம்பமும்
 முகவசி கரமிருக வசிகரமும்
மேகசூ லையுங்குன்ம வாதங்க ளுக்கந்த
 வில்வாதி விஷமுட்டித் தயிலங்களும் (5)

ரோகங்க ளுந்தானின்ன தென்றே யறிந்துசொல்ல
 நொண்டித் திம்மாசிப் பண்டிதனும்
வாகடப் பொத்தக மாத்திரை யுங்கொண்டு
 வயித்திய ரும்வந்து தோன்றினரே. (6)

விருத்தம்

78. வயித்தியர் தானுங் காரி மன்னவா கேள யுந்தன்
வயித்தில்மா தவப்பாலற்கு வாதபித் தங்கள் சேட்பம்
நயத்துட னறியவேண்டி நாடிகள் நன்றுய்ப் பார்த்தோம்
சயித்தியஉட் ணஞ்சேர் வ்யாதி தானிது வல்லவென்றூர்.

Koviloor Digital Library



79. தானிது வல்ல வென்ருல் சாத்திரக் காரர் சோசியர்
ஞானமு மேமி குந்தோர் நன்மறை யோது பார்ப்பார்
பானுவைப் போலு தித்த பாலற்கீ தென்றே சொல்ல
மானிலத் தாய்ந்து பார்த்து வந்திடச் சொல்லு வீரே.

தரு

80. அப்பையுந் தொப்பையுங் குப்பா பட்டரும்
அம்பியு நம்பியின் தம்பியு மாயந்த
அம்மா ளய்யனும் பெம்மா ளய்யனும்
அத்தா னய்யனும் பொத்தா னய்யனும்

அப்பா வையனும் சுப்பா பட்டனும்
ஆதிமுத் தையனும் வேதம்பெத் தய்யனும்
அண்ணு வையனும் தெண்ணூ ரையனும்
அந்தணரும் வந்து தோன்றினுரே.

விருத்தம்

பாட்டன்தலை முறையிலேநாம் பஞ்சாங்கம் பார்த்ததில்லைக்
கேட்டைமுட் டையுமே செவ்வாய்க் கிற்திகை பரணி நாளும்
கேட்டுத்தமமே காதெசி கிராணமும் வருகு தென்று
போட்டிசாத் திரங்கள்சொல்லப் புரோகிதர்தோன்றினுரே.

தரு

82. சீவை குண்டந் திருக்குருகூர்
தென்திருப் பேரும் திருக்கோளூர்
தேவ ரிரட்டைத் திருப்பதியும்
சீர்வளர் தாந்த க்ஷேத்திரமும்
பூவுல கம்புகழ் பெருங்குளமும்
புளிங்குடி வரகுண மங்கையுடன்
காவலன் பாற்சாத் திரங்கள்சொல்லக்
கட்டளைப் புரோகிதர் தோன்றினுரே.

Koviloor Digital Library



வேறு தரு

83. பட்டவர் திதிக்கிலே யிட்டரிசி வாங்கும்
மட்டிச் சங்கரனு மொட்டைச் சுப்பனும்
பட்டணப் புரோகிதம் கட்டளை நம்மதென்று
குட்டைநா கநாதனுந் தோன்றினுரே.

விருத்தம்

சாத்திர மெல்லாம் பார்த்தோம் சகலசோ சியங்கள் பார்த்தோம்
பிரார்த்தனை யான உன்றன் பாலன்சா தகப்ப லன்கேள்
நாற்றிசை புகழு மாதி நாதனைப் பணிந்தெந் நாளும்
ஏற்றமாய்த் திருப்பு ளிக்கீ ழிருப்பனென் றிருக்கு தையா.

இருக்குதென் றுரைக்கு மப்போ திதயமு மிகத்த ளர்ந்தே
உருக்கமாய்ப் பெற்ற பாலன் உகந்துதான் திருப்பு ளிக்கீழ்
இருக்கவும் பிரம தேவன் எழுதின படியோ என்று
கருத்தினில் விசார மிட்டுக் காரிரா சனுமி ருந்தான்

86. நங்கைபால் நம்பி மாலும் நாமமும் நம்மாழ் வாராய்ச்
செங்கைமுத் திரையு மாகித் திருவவ தாரஞ் செய்யச்
செங்கதி ருதயம் போலத் தெட்சிணம் விளங்கக் கண்டு
கங்கையின் கரையி ருந்த கனதவ யோகி வந்தார்.

தரு

87. கதிரவ னுதயம் போலக் காணவுமே தெட்சி ணத்தில்
அதிசயம் பார்க்க வென்று அன்புடனந்த க்ஷணத்தில்
துதிபர வுங்குருகூர் சுருதித் தமிழ் மணத்தில்
மதுரமொழி தேடிய மதுரகவி தோன்றினுர். (1)

தரித்தசெப தாவடம் தண்டுடன் கமண்டலமும்
விரித்த சடைமுடியும் மின்னூல்ரத்ன குண்டலமும்
மருக்கமழும் வகுள மாறன்ற வீறன்தலமும்
கருத்துள்நா டிமதுர கவியோகி தோன்றினுரே. (2)

Koviloor Digital Library


விருத்தம்

88. கொற்றவன் காரி ராசன்குமாரமார்த் தாண்டம் போற்றி
முத்திக ளருளும் ஞான முத்திரைக் கையா போற்றி
நற்றவ முடையாய் போற்றி ஞானதே சிகனே போற்றி
கர்த்தனே போற்றி யுன்தன் கழலிணைபோற்றி போற்றி.

89. "செத்தத்தின் வயிற்றி லேதான் சிறியது கிடந்த தானல்
எத்தைத்தின் றெங்கேதானே யிருக்குமோஇயம்பும்" என்ன
"அத்தைத்தின் றங்கே தானே யிருக்கு" மென் றந்த ரங்கம்
முத்தமிழ்த் திருக்கோ ளூரின்முனிவனுக் குரைசெய்தானே.

முனைபெறத் திருக்கோளூரின் முனிவனங்கேது சொல்வான்
மனமிக வும்ம கிழ்ந்தேன் மன்னவா கேளா யுன்றன்
தனையனென் றிருக்க வேண்டாந் தானிவன் தேவன்கண்டாய்
உனதுநாடாண்டு கொண்டு உகந்துதானிருக்கச் செல்வாய்.

91. எனதுள மகிழ வேதான் இவ்வுல களந்த நம்பி
தனையனென் றேயு தித்த தாலவன் தேவ னென்றால்
முனிவனே அடியே னுந்தான் முத்திதான் பேறவே தேவர்
அனைவருஞ்சேவையென்பா லளித்திடச் செய்வீ ரென்றான்.

92. விளங்கவு முனிவ னப்போ விண்ணவர் மாறன் மார்பில்
உளங்களி கூரச் சேவை யுகந்துதா னளிக்கச் செய்து
வளங்கள்சேர் வழுதி நாடும் மன்னவா ஆள்நீ யென்ன
தெளிந்துநற் காரி தாந்த க்ஷேத்திர மேகினனே.

அந்தமாய்த் தவங்கள் செய்யும் அகத்திய முனிக்குத் தானே
சந்ததந் தமிழ்க்கு முத்தி தந்திட நம்மாழ் வார்க்குச்
சிந்தையில் துயர கற்றிச் சேவையு மளிப்போ மென்று
நந்தணி ஸ்ரீவை குண்ட நாதனுங் குருகை வந்தார்.

கண்டார்வம்—தரு

94. கருடன் மேல்ஸ்ரீ வைகுண்ட நாதர் வருவது
காணக் கண்க ளாயிரம் வேணுமே.

Koviloor Digital Library



விருது நாகசர மேள வாத்தியங்க ளடிக்க
மெல்லியர் சாமரைபோட வெண்குடைகள் பிடிக்க
கருணைக்கிருபைக் கடலெனவுங் கட்டியங்கள் படிக்க
கனகரத்தி னுபரணக் கன்னியர்கள் நடிக்க—கருடன் மேல் (1)

கந்தருவர்க ளும்நாதகீ தங்களும் பாட
கமலமல ரடிசேவை கண்டுகலி யோட
அந்தரத் தமரர்களும் அனைவருங்கொண் டாட
அவனிதனில்விளங்கஅருமறையின்தமிழ்தேட—கருடன்(2)

நாதமுனிக் காகநம் மாழ்வார வதரிக்க
நான்முக னிந்திரன் முனி நாரதரு முபசரிக்க
பாதசேவை களைக்கண்டு பத்தர்ந மஸ்கரிக்க
பாருலகோ ருய்யும் படிக்கவேவந் துபகரிக்க (3)

கருடன் மேல்ஸ்ரீ வைகுண்ட நாதர் வருவது
காணக் கண்க ளாயிரம் வேணுமே.

விருத்தம்

வாசவன் முனிவன் போற்றும் வைகுண்ட பதியேபோற்றி
காசினி யளந்தாய் போற்றி கருடவா கனனே போற்றி
தேசுள சிலையும்வாளும் திகிரிசங் கணிந்தாய் போற்றி
ஈசனே போற்றி யுன்றன் இணையருள் போற்றி போற்றி.

96.முனைபெற நம்மாழ் வாரை முத்தமி ழுரைக்கச் சொல்ல
அனுதினம் விளங்கந் தாதி யாசிரி யமும்வி ருத்தம்
எனுந்திருவாய் மொழிச்சொல்இயம்பவு நூற்றெண்மாலும்
மனமகிழ் திருப் புளிக்கீழ் வந்தெமைப் பாடு மென்றார்.

இந்தநற் பிரபந்தம்சொல்ல எடுத்ததைப் படித்த பேர்கள்
அந்தமாய் வானிற்செல்ல ஆதலா லஃதி றக்க
செந்தமிழ்ப் பிரபந்த மிந்தச் செகந்தனில் விளங்கச் செய்ய
சிந்தையுமகிழ்ந்துவிஷ்வக் சேனரைப் பார்த்துச்சொல்வார்.

Koviloor Digital Library



98. செகதலம் புகழும் விஷ்வக் சேனரே சொல்லக் கேளிர்
நகைமுகச் சோதி மன்ன னார்தலந் தன்னி லேதான்
முகமிக மலர்ந்து நாத முனியென அவத ரித்து
மகிமைசேர் குருகை நோக்கி வந்திடும் என்று சொன்னார்.

தவங்கள்செய் காரி ராசன் தனையன்வாழ் தலத்தை நோக்கி
கவனமும் மனதில் எண்ணிக் கடுகியே வருகும் போது
நவமணித் துளவம் பூண்ட நாதமா முனிகு டந்தை
அவனியிற் புகழ வந்தார் அந்தணர் தோன்றி னாரே.

100. பிளைகள் சோரக் கண்கள் பித்தெழ இருமல் நோக்கும்
கோளையும் உடல்நடுங்கிக் குழறியே பேசிக் கொண்டு
வாளைகள் தாவுஞ் சோலை வயல்கயற் சூழ்கு டந்தை
ஆளெனத் துதிகள் செய்தே அந்தணர் தோன்றினாரே

தரு

101. குடுக்கைக் காப்புப் போலுடல் மாசியும்
குறுகியே நடந்து கையை வீசியும்
நடுக்கி நடுக்கிக் குழறிப் பேசியும்
நரைத் தலையும்பல் பிடித்த பாசியும்
இடிக்கி யிடிக்கியே கண்கள் கூசியும்
இரைத்திலும் பிக்கொண்டு சிந்தும் நாசியும்
அடுத்தாரா வமுதனைத் துதிகள் செய்யும்
அந்தண ரும்வந்து தோன்றி னாரே.

விருத்தம்

சிலையுடன் கதையும் வாளும் திகிரிசங் கணிந்த தோளன்
அலைகடற் றுயிலும் ஆரா வமுதனைத் துதிகள்செய்யும்
சொலவினில் ஆயிரத் துளிப் பத்தெனுஞ் சொல்லைக் கேட்டு
நலமருள் குருகை நோக்கி நாதமா முனிவந் தாரே.

தரு

103. நம்மாழ்வாரை நாளும் போற்றிசெய்திட
நாதமுனி வந்தாரே.
இம்மா நிலம்புகழ்ந் தேத்துங் குருகையில்
இங்கித மாயந்த ரங்கம் மதுரகவிக்
கங்கமா யுரைசெய்த நங்கை சுதராக (நம்மாழ்வாரை)

Koviloor Digital Library


பாகவ தப்ரா வண்ணியமு டன்சீர் வேஷ்டியும்—திரு
பன்னிரு நாமம் விளங்கிய பரத நாட்டியம்
ஆகம வேத புராண ப்ரபந்த கோஷ்டியும்—செக
தாநிநா தன்சங் நதித்திருப் புளிநிழற் காட்சியும்
கோகந கக்கரம் ஞான முத்திரையும்
யோகமுந் தாம்பிரவர் ணியின்நதிக் கரையும்
பாகெனும் நற்றமிழ் ராகம்பண் ணிசைவை
போகமும் நித்திய ராகிய குருகூர் (நம்மாழ்வாரை) 1

காசினியெண்ணேழ்தேசமெங்கும்புகழ்மாகாரியின்-பாலில்
காதல ஞகிவந் தவதரித் திடுமா காரியன்
தேசுள ஞானப் பிரகாசம் விளங்கிய சூரியன்—போல
திருவவ தாரமும் பூரண கடாக்ஷ உதாரியன்
வாசமு மேகமழ் வகுளா பரணன்
மாமதி முகம்விளங் கியலோக சரணன்
வீசிய புகழ்மகா தேசிகன் குருகூர்
வாசமு மானஉல் லாசவை போக (நம்மாழ்வாரை) 2

கொண்டல் தவழ்மலர்க் குழல்முடி யிட்டலங் காரமும்-கொண்ட
கோலமு மேவளர் சுந்தர வச்சிர சரீரமும்
அண்ட ரண்டபகி ரண்டங் களுக்கா தாரமு—மான
அருமறை யின்பொரு ளின்றமிழ் வேதகம் பீரமும்
வண்டணி செந்துள பந்திகழ் தோளும்
வாதியர் நிதம்பணிந் தேத்தும்பொற் றளும்
தண்டனிடுந் தொண்டர் கண்டுகண் களிகூர
புண்டரீகக்கரங்கொண்டமுத்திரையும்(நம்மாழ்வாரை)3

### கலித்துறை

துயர்நீக்கும் ஞானச் சுடரொளி யாய்வந்து தொண்டுகொள்ளும்
செயலும் பரகதி தானே யளிக்கும் தெரிசனத்தின்
நயமும் வகுளப் பெருமான் உரைக்கின்ற நற்றமிழும்
உயர்தென் குருகை நகர்க்கிணை யோஇவ் வுலகங்களே.

Koviloor Digital Library



தரு

105. இந்தப்பூ லோகத்தில் குருகூரி னதிசயம்
போலவே தானுமுண்டோ.
நம்பிமா லானநம்மாழ் வார்வாழும் வளநாடும்
வல்வினை கள்பறந் தோடும்—நாளும்
நல்கும் வரமுங்கை கூடும்—நல்ல
கல்விப் பொருள்களைத் தேடும்—வேதச்
சொல் விளங்குந் தமிழ்ப்பாடும் (இந்தப்பூ)

கொஞ்சு கிளிகுயில் கூவும் செம்பொன்மதில்
கோபுர முமலங் காரம்—நாளும்
மிஞ்சு புகழ்வேத கோஷம் முழங்கொலி
வீதிகள் தோறும்விஸ் தாரம்—அந்த
பஞ்ச பாணனு மயங்குந் தெரிசனம்
பாகவ தாள்பரி வாரம்—மனச்
சஞ்சல மில்லாமல் தானளிக் குமுத்தி
தாம்பிர வர்ணிநதி தீரம்—அதைத்
தஞ்சமென் றார்க்குப சாரம்—ஆர்க்கும்
நெஞ்சமஞ் சாதாண்மை வீரம்—செய்யும்
வஞ்சனை தீர்க்குங் கொடூரம்—அதை
என்சொல்வேன் காணுங்கெம் பீரம் (இந்தப்பூ) 1

உன்மத பித்தம் பிடித்துப் பதைத்துடல்
ஊன்றும்ல் வேருடன் பேர்க்கும்—பின்பு
தன்மநி னைவுகொள் ளும்படி யாக்கியே
தன்பொரு ளன்றேதற் காக்கும்—அந்த
மின்முகில் வண்ணன்அ டிமையென் றேபரம்
வீற்றிருக் கும்படி சேர்க்கும்
பொன்முடி வானவ ரினனுடன் கூடிப்
பிரியாம லேகிருபை பார்க்கும்—செய்த
கன்மவி டாய்களைத் தீர்க்கும்—இனிச்
சென்மமெ டாவர மேற்கும்—படி
இம்மையி லேதாரை வார்க்கும்—அதில்
நன்மையுண் டாமேயெல் லார்க்கும் (இந்தப்பூ) 2

Koviloor Digital Library



ஞாலமுன் டானடி காணவுன் டாம்மிக
ஞான பக்திவை ராக்கியம்— அந்த
நீலவன் னுறு நாதன்சே வைநிதம்
நிட்சேப முஞ்சேவை பாக்கியம்—நாளுஞ்
சேலெழு துங்கிரு வின்கடாட் சம்வளர்
செய்யும் மறைத்தமிழ் வாக்கியம்—நங்கை
பாலனு கியநம் மாழ்வார் களிகூரும்
பாங்கான க்ஷேத்திர ஆ ரோக்கியம்—அனு
கூலதெ ரிசன யோக்கியம்—அதி
னூலே விளங்குஞ்சி லாக்கியம்—இனி
மேலுண் டேபோக போக்கியம்—ஒருக்
காலுமே நீங்காத சௌக்கியம் (இந்தப்பூ) 3

விருத்தம்

106. பரிவுடன் இருப்பு ளிக்கீழ்ப் பராங்குச நம்பி யப்போ
கரிசன மாக வந்து கண்ணிநுண் சிறுத்தாம் பைத்தான்
உரையுமா யிர மீரா றுருவெனச் செய்தீ ராகில்
கருணைசேர் நம் மாழ் வாரைக் காணலாம் என்று ரைத்தார்.

கரமுமே கூப்பி அன்பாய்க் கண்ணிநுண் சிறுத்தாம் பைத்தான்
உருவுமா யிர மீரா றுரைத்திட வேயு கந்து
சுருதிநற் றமிழ்ப்ர பந்தஞ் சொல்லவென் றேநம் மாழ்வார்
பிரியமாய் மாமு னிக்குப் பிரத்யக்ஷ மாயி னரே.

சாவேரி தரு

108. நம்மாழ் வார்திரு அவதாரஞ் செய்த
ஞான தேசிகன் சேவை பாரும்
இம்மா நிலத்தில்கா ரியுமனங் களிக்கவே
மின்முகில் நம்பி மாலுமக வாகிய (நம்மாழ்)

நெத்தியி லணிகஸ் தூரியின் காப்பும் - துயர்
நீக்குமந் தகாசச் சேவையின் கோப்பும்
பத்தியு டனடி யார்கை கூப்பும் - நாளும்
பரப்பிரம்ம த்தியானம்செய்திடும் வாய்ப்பும்-எங்கும்பிர
சித்த னெனும்பரி சுத்தன் நித்திய
முத்தி தரும்மறை நற்றமிழ்க் கொரு
கர்த்தன் எனவளர்த் தமுத் திரை
பெற்ற திருக் குருகைத் தலந்தனில். (நம்மாழ்) 1

Koviloor Digital Library



தாதம ருஞ்ச ரோருகக் கையும் - அந்தத்
தடன னுதயம் விளங்கிய மெய்யும்
ஆதிநா தனையா ராதனை செய்யும் - அன்பாய்
அடிய வர்க்கிரு வினைகளைக் கொய்யும்-திகழும்வெண்
போதில்நான் முகன்வே தந்தமிழ் செய்து
நாதமு னிக்குகந் தோதும் மகிமையும்
தீதிலா மனு நீதி புனையுநல்
மாதவம் புரி சீதர னிந்த (நம்மாழ்) 2

திருமஞ் சனமு முழக் கொலியும் — அந்தச்
சேவையைக் கண்டோடுங் கலியும்
சுரர்து தித்துத் தொழுமஞ் சலியும் — காந்தி
துலங்க வேவத னமம் புலியும்-நற்புனல்
பருகுகங் கையின்கரை யில்நற் றவம்புரி
மதுரகவி வருகவவற் குகந்துரை செய்கையுந்
திருவர வப்புளி நிழல்திர மமான
தென் குருகை வாசமும். (நம்மாழ்) 3

விருத்தம்

காமவேள் தாந்த க்ஷேத்ரங் காரிரா ஜேந்த்ர சந்த்ரன்
தாமகிழ்ந் தருளும் ஞானத் தமிழ்க்கடல் அமுதே போற்றி
நாமமே விளங்கு கின்ற நற்றவ முடையாய் போற்றி
மாமலர்ப் பதனே போற்றி வகுளதே சிகனே போற்றி.

தாழிசை

110. குருகைவா ழுந்திரு வழுதிநா டனெனுங்
குருபரன் இருபதாம் புயன்
குணநிதிக் கடலும் இணையுமற் புதமும்
குமுதவா யின்மொழி யமுதமும்
இருசெவிக் குழையும் அசையும்விற் புருவம்
இந்துநேர் வதன அந்தமும்
எழில்முடிக் குழலும் அழகுபற் குறியும்
இருபுயங் களணி வகுளமும்

Koviloor Digital Library



அருமறைப் பொருளை உரைசெயுந் தமிழை
அடியவர்க் கருள் சகாயமும்
அன்னகே தனமும் பன்னகா சயன
ஆதிநாத னூடத் தியானமும்
தெரிசனப் பிரபல வரிசைபெற் றமகா
தேசிகன் பரம ராசியன்
செங்கையேந் துந்திரு ஞானமுத் திரையுஞ்
சேவை காண் இவன் சிலாக்கியமே.

சுருட்டி தரு

111. இவனே சிலாக்கியங் காணும் - அறியச் சொன்னேன்
இகபர சாதகம் பூணும்
தவஞ்செய் ஞான போதனன் தழைக்கு மன்ன கேதனன்
அவனே மது சூதனன் அவனுக் கவன் சேதனன்.(இவனே)
தருஞான முத்திரைக் கையும் - இவனையல்லாற்
றவங்கள்செய் வதெல்லா மையம்
இருவி னைகளைக் கொய்யும் பெருமை பெற்றிடும் வையம்
குருபீ டமான மெய்யும் திருவவ தாரம் செய்யும்.(இவனே)
உள்ளங்கைக் கனிபோல் மித்திரன் - அமரரெல்லாம்
உரைக்கின்ற தேகப வித்திரன்
தெள்ளுந் தமிழ் விசித்திரன் திருவி சாகக் க்ஷத்திரன்
வள்ளல்கா ரியன் புத்திரன் மாலா கியச ரித்திரன்.(இவனே)
பதுமப்பொற் பதங்கள்நாடும் – சேஷகவிஞன்
பகருந் தமிழ்மாலை சூடும்
மதுரவாய் மொழி பாடும் மகிமைபோ லுண்டோ யீடும்
சதுமறைப் பொருள் தேடும் சடகோப னைக்கொண் டாடும்.( இவ)

தாழிசை

குருகைப்பதி தனிலற்புத னெனுஞ்சற்குரு பரனே
கூறுந்தமிழ் மாறுவளந் தேறும்புளி நிழலும்
மருமொய்த்திடு களபப்புய வகுளப்பெரு மானே
மதுரைப்பதி சங்கத்தமிழ் வணங்கும்பொற் பதஉன்
சுருதிப்பொருள் தமிழேதமிழ் அல்லாமலே உலகில்
சொல்லுங்கவி எல்லாம்ஒரு சொல்லுக்கிணை யாமோ
தருவொப்பெனும் அருமைப்பொருள் கருணைக்கடல்நிதியே
தரணிப்புகழ் காரிக்குல ஞானச்சட கோப.

Koviloor Digital Library


நீலாம்புரி—தரு

113. சடகோப திவ்வியகுண ரத்னப் பிரதாப
தடசித்த தாம்பிர வர்ணிநதி தீர
திருக்குரு கூர்வாழுஞ் செண்பக மாற
கெம்பீர உபகார அவதார (சடகோப)

சுந்தரஞ்சேர் சந்திரபிம்பம் போல்வதனப் பிரகாச
சிந்தைதனிலே தியானம்செய்யுந் தவயோக உல்லாச
மந்தகா சமும்சேவை தந்தருள் வாயே
வாசங் கமழ்வகுள மாலிகா பரண
லோசரணு ரவிகிரண திவ்யசரண (சடகோப)

மதுரகவிக்கே அந்தரங்கம் உரைக்கின்ற மெய்ய
சதுமறைக்கும் தமிழ்செய்யும் ஞானமுத்திரைக் கைய
பதுமநாப னென்ருதி மலரனே தூய்ய
பரஞ்சோதி யேபரந் தரும்ஆசை பூணும்
நெஞ்சிற்பே ணும்வினை நாணும்திரங் காணும்(சடகோப)

மனமகிழ்ந்து சேஷகவி தமிழ்புனையும் பொற்ருள்
அனுதினமும் அன்பாய்அடி யவர்க்கருளுந் தயாள
உனதருமை என்றிந்த சன்மமுமீ டேற
உண்மைசொன் னேனுன்த னடிக்கேயா ளாக்கும்
இசைநோக்கும் தமிழ்வாக்கும் துயர்நீக்கும் (சடகோப)

வசன விருத்தம்

114. ஞானதே சிகனும் அந்த நாதமா முனிக்கு கந்து
தானவர் பிரபந்த முற்றுந் தானுரைத் திட்டெந் நாளும்
மானிலத் தவர்க்கு நீரும் மறைத்தமிழ் ப்ரபந்தந் தேவ
கானமாய்உரையுமென்று களிப்புடன்முனிக்குச்சொன்னார்.

மகிமைசேர் மாறன் பொற்றாண் மண்டபந் தனிலி ருக்க
நகைமுகம் இலங்க வேதான் நாதமா முனிவ னுந்தான்
இகபரந் தரும்ப்ர பந்தம் என்றுல கோர்க்க ளித்து
அகமகிழ்ந் தனுசந் தானம் அனைவரும் உரைக்கச்செய்தார்.

116. நாதமா முனிக்குச் சேவை நல்கியே நம்மாழ் வாரும்
பூதலம் புகழ்ந்து போற்றப் பொற்றாணின் மண்டபத்தின்
மாதவத் திருப்பு ளிக்கீழ் மஞ்சன மாடி ஆதி
நாதனைப் போற்றிசெய்தே நாளுந்தென் குருகைவாழ்ந்தார்.

Koviloor Digital Library



117. அறுதின முச்ச வத்தோ டாண்டுபட் சோச்ச வங்கள்
மனமகிழ் வாக னந்தோர் மாதவுச் சவம்வி ளங்கக்
தனதடி யார்க்கு நித்திய ததியா ராதனை செய்தே
தினகரன் உதயம் போலத் திருமகிழ் மாறன் வாழ்ந்தார்.

மங்களம்

118. மதுரகவி எதிராசர் மணவாள மாமுனிக்கு
நதிதாம்பிர வர்ணியாதி நாதனுக்கு
பதின்மர்மறைத் தமிழ்ப்பிரபந்தம் பாடும்நாத மாமுனிக்கு
கதியருளுந் தென்குருகைக் காரிமா றற்குசெய
மங்களம் நித்திய சுப மங்களம்.

காரேநிகர் கருணைவள்ளற் காரிரா சேந்திரனுக்கு
பாருலகில் உடைய நங்கை பாலனுக்கு
மாறன்திரு வண்பரிசா ரந்திருவாழ் மார்பனுக்கு
சீருலவும் புயன்வகுள தேசிக னுக்கு செய
மங்களம் நித்திய சுப மங்களம்.

ஆதிநாதரைப் பணிந்தே யரவத்திருப்புளிக்கீழ்
மாதவம் புரியும்நம் மாழ்வாராய் வந்தவர்க்கு
மங்களம் மகிழ்மாறற்கு மங்களம்.

விருத்தம்—வாழி

119. அருமறையின் தமிழ்நாலா யிரமும் வாழி
அரங்கநகர்க் கந்தாடை அண்ணன் வாழி
திருவளரும் நாதமுனி ஆதிநாதன்
திருக்கோளூர் முனிவன்தென் குருகை வாழி
கருணைவளர் நூற்றெட்டுப் பதியும் வாழி
காசினியிற் சேஷகவிப் பிரபந்தம் வாழி
தருவளருந் தாம்பிரவர்ணி நதியும் வாழி
தலத்தாரும் சடகோபர் நாளும் வாழி.

விருத்தம்

தரணியில் நம்மாழ்வார்தஞ் சரித்திரந் தன்னை அன்பாய்
பரிவுடன்படிப்போர்கேட்போர் பரதமாய்நடிக்கின்றோரும்
நரகரி முகுந்த னாதி நாதனற் கிருபையி னாலே
பரகதிக் கன்ப ராகப் பாருல காள்வர் தாமே.

ஸ்ரீ பராங்குச நாடகம் முற்றிற்று.

Koviloor Digital Library



சேவிக்க வாருங்கோள் பெண்காள்—எங்கள்
வாழ்விக் குருகை வகுளா பரணரைச்
சேவிக்க வாருங்கோள் பெண்காள்.

எருதுக்குக் கொண்டாட்டம் திரணம்—பெண்கள்
இணைமுலைக் கணிவது முத்தா ப்ரணம்
பருதிக்கோர் ஆயிரங் கிரணம்—ஆழ்வார்
பத்தாந் திருநாள் சத்தா பரணம் (சேவி) 13

கொடுங் கையிலே வவ்வால் நாத்தி—ஆழ்வார்
குழம்புப்பால் அரவணை அதிரசம் நேர்த்தி
சடகோபர் தாளிணை போற்றி—சகலர்க்குஞ்
சந்தோஷ மாகத் திருவிடா யாத்தி (சேவி) 14

960-ம்ளு ஆவணிமீ 12-உ செவ்வாய்க் கிழமையும், அஷ்டமியும் சுபயோக சுபகரணமும் பெற்ற ஆஸ்ரேசாய நக்ஷத்தரத்து நாள் இந்தப் பராங்குச நாடகம் எழுதி முகிஞ்சது. முற்றும். ரெகுநாத சாரியார் தாசன் சுந்தர ராஜன் எழுத்து. ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

இந்த ஆழ்வார் நாடகம் ராமாயணம் சாத்தாதவரும் பார்த்து சுவாமி சந்நதியிலே அரங்கேத்தினது.

---

Koviloor Digital Library



## நன்றியுரை.

புத்தனேரி ஸ்ரீ பத்மநாபய்யங்கார்.

30—5—43.

தமிழினுக் களித்தான் முத்தி தாந்தமாப் புனித நாடன்
அமிழ்தொலி வேத நான்கின் ஆயிரம் உரைத்த நாவோன்
உமிழ்திரைத் தரளப் பாண்டி ஒளியிசைக் குருகை யாளன்
இமிழ்மொழி காதை மாந்தர் இமைப்பருந் தவத்தின்பேறே.

வேதமாக் கடல் கடைந்த வித்தகன் அதற்கு முத்தி
கோதறத் தந்த மாறன் புகழைமுத் தமிழிற் கூறும்
சோதியா மிந்தத் தொன்னூற் சுவையினைப் பருகு விக்கும்
தீதறு பெரியன் ஸ்ரீநி வாசனின் செவ்வி வாழி.

ஸ்ரீவானமாமலை மடம் ஆஸ்தான வித்துவான் தென்திருப்பேரை
அபிநவ காளமேகம் ஸ்ரீ அனந்த கிருஷ்ணய்யங்கார்:—

24—9—45.

சேடனும் புலவர் கோன் முன்செய்பராங் குசன்றன் காதை
நாடகச் சுவையுட் கொண்டே நல்லறி வாளர் யாரும்
ஏடவிழ் வகுளத் தாரான் இன்னருட் கிலக்காய் வாழ்வான்
பீடமை சீநி வாசப் பெரியனே வெளியிட் டானே.